19th November 1963]

அழைப்பு கொடுத்து இது போன்ற மடாதிபதிகளை அழைக்க சட்டத்தில் இடம் இருக்கிறதா? அல்லது அந்த அதிகாரி தனிப் பட்ட முறையில் அழைத்தாரா?

கனம் திரு. கோ. பூவராகன்: அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறது. விரும்பினால் அழைத்து போதனை செய்யச் சொல்லலாம்.

Jails (religious discourses)

*301 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to arrange for the preaching of Bagavatgheetha, Bible and Qoran in Central Jail for the benefit of the convicts?

The Hon. Sri G. BHUVARAHAN: No.

இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், அரசாங்கம் இந்த மாதிரி ஏற்பாடுகள் செய்ய முன் வருமா?

கனம் திரு. கோ. பூவராகன்: அரசாங்கம் அவ்வாறு ஏற்பாடு செய்வதாக உத்தேசம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், கோயம்புத்தூர் மத்திய சிறை யில் நூல் நூற்பு பகுதி இருக்கிறது அல்லவா? அதில் தண்டனை அனுபவித்துவரும் மில் அதிபர் கிருஷ்ணன் அவர்கள் மில் பகுதி யை கண்காணிக்க ஏற்பாடு செய்து அபிவிருத்தி செய்வதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் அங்கத்தினர் கேள்வி யிலிருந்து இந்தக் கேள்வி எழவில்லை. இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கைதிகள் சிறையிலிருந்து விடுபட்டபின் நல்வாழ்க்கைக்குத் திரும்ப என்ன ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறது?

கனம் திரு கோ. பூவராகன்: அதற்காகத்தான் இது போன்ற ஒழுக்கத்தைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும், யார் யார் விரும்புகிறார்களோ அவர்களைக் கொண்டு போதனை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

வாடகை—மோட்டார் டிரைவர்கள் (வேலை நிறுத்தம்)

*302 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மோட்டார், ஆட்டோரிக்ஷா டிரைவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவது பற்றி சர்க்காருக்கு அறிவித் துள்ளனரா?